முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1363

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.06.2023, வெள்ளிக்கிழமை

1. பரபிரம்ம சொரூபனே அரங்கா வாழ்க
பரோபகாரம் காட்டி இந்த கலியுகத்தில்
வரம்தந்து மக்களை மீட்கும் பொருட்டு
வள்ளலாய் அவதரித்த குருராஜனே வாழ்க

(சோபகிருது வருடம் ஆனி மாதம் 08 ம் நாள், 23.06.2023, வெள்ளிக்கிழமை)

2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
தாழ்விலா அரங்கனின் பிரணவக்குடிலும் தரணியில் பூலோக சொர்க்கமாகும்
வரம்பெற உலகோர் அவசியம் வரவேண்டும் உன் ஞானசபைநோக்கி

3. சபைநோக்கி உலகோர் வணங்கிவந்து
சரணாகதி கொண்டு விட்டால்
அபயமென ஆறுமுகன் யானும் அவர்க்கருளி
ஆற்றல்பட அழியாமை தந்து காப்பேன்

4. காப்பாக அரங்கன் தர்மம் தான்
கலியுகத்தில் சக்தியாக இருந்துவர
ஒப்புகொண்டால் உலகோர்க்கு ஞானசித்தி
உயிர்பாதுகாப்பு இனிபிறவா சக்திநிலை கூடி

5. தப்பாது பிறவிப்பயன் பூர்த்தியாகும்
தவராஜன் உன்வழி அனைவர்க்கும் சித்திகிட்டும்
கிட்டவே அரங்கனுள் யானிருந்து
குறைவின்றி உலகோர்க்கு ஞானம் அருள

6. தட்டாது அரங்கன் திருவடி பற்றி
தவமோடு கூடிய உயர் தீட்சை பெற்றால்
கட்டம் விலகும் கலியின் துன்பங்கள் ஓடும்
கருணாமூர்த்தி அரங்கன் தயவாலே

7. தயவாலே உலகோர்க்கு சர்வபலமும்
தனதேட்டு வளமோடு சகலஞானமும்
தயவாக வந்தடைந்து தரணிதன்னில்
தானவர்கள் ஞானிகளாக சிறக்க நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–